


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன் சிங் ரா.சவான் இ.ஆ.ப. அவர்கள், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், இந்திய வேளாண் ஆராய்ச்சி மைய அலுவலர்கள், கால்நடை அறிவியல் கல்லூரி பேராசிரியர்கள், தன்னார்வ தொண்டு நிறுவன அலுவலர்கள், மக்கள் கணினி மைய அலுவலர்கள் மற்றும் நேரு யுவகேந்திரா தன்னார்வ தொண்டு அலுவலர்களுக்கான, சமூக மேம்பாட்டிற்கான தகவல் பரிமாற்ற தளம் (விகாஸ்பீடியா பயிற்சி)-ஐ மாவட்ட ஆட்சியர் அலுவலக வருவாய் கூட்டரங்கில் இன்று (29.11.2016) துவக்கி வைத்தார். மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி. விஜயராணி உடனுள்ளார்.

**செ.வெ.எண்: 841/2016** **நாள்: 29.11.2016**

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன் சிங் ரா.சவான் இ.ஆ.ப. அவர்கள், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவன அலுவலர்களுக்கு சமூக மேம்பாட்டிற்கான தகவல் பரிமாற்ற தளம் (விகாஸ்பீடியா பயிற்சி)-ஐ இன்று (29.11.2016) துவக்கி வைத்தார்**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன் சிங் ரா.சவான் இ.ஆ.ப. அவர்கள், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், இந்திய வேளாண் ஆராய்ச்சி மைய அலுவலர்கள், கால்நடை அறிவியல் கல்லூரி பேராசிரியர்கள், தன்னார்வ தொண்டு நிறுவன அலுவலர்கள், மக்கள் கணினி மைய அலுவலர்கள் மற்றும் நேரு யுவகேந்திரா தன்னார்வ தொண்டு அலுவலர்களுக்கான, சமூக மேம்பாட்டிற்கான தகவல் பரிமாற்ற தளம் (விகாஸ்பீடியா பயிற்சி)-ஐ மாவட்ட ஆட்சியர் அலுவலக வருவாய் கூட்டரங்கில் இன்று (29.11.2016) துவக்கி வைத்து, தெரிவித்ததாவது:-

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கான சமூக மேம்பாட்டிற்கான தகவல் பரிமாற்ற தளம் (விகாஸ்பீடியா பயிற்சி) இன்று நடைபெற்றது.

இந்த தகவல் பரிமாற்ற தளம் மூலம், அனைத்து தகவல்களையும் ஒரே இடத்தில் மக்கள் பகிர்ந்துகொள்வதற்காக, தேசிய அளவில் செயல்படும் ஒரு பன்மொழி தளம். தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி, சமுதாய மேம்பாட்டில் பங்கேற்றுள்ள முக்கிய அங்கத்தினரான தன்னார்வளர்கள், அரசு, அரசு சாரா தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் தனியார் அமைப்புகளை ஒருங்கிணைத்து, சமூக மேம்பாடு பற்றிய தகவல்கள் மற்றும் அனுபவங்களை மக்களுடன் பரிமாறிக்கொள்ளும் நோக்கத்துடன் இத்தளம் செயல்பட்டு வருகிறது.

விகாஸ்பீடியா, தேர்ந்தெடுத்த துறைகளில், சமுதாயத்தில் பின்தங்கிய மக்களின் மேம்பாட்டிற்கு வழிவகுக்கும், வாழ்வாதாரம் சார்ந்த, ஆக்கப்பூர்வமான மற்றும் நம்பகமான தகவல்கள் மற்றும் தகவல் சார்ந்த சேவைகளை, அவர்களது தாய்மொழியிலேயே அளிக்கிறது. மேலும், இந்த தளம், பலரின் பங்கேற்பால் ஒருமித்த தகவல்களை உருவாக்கவும், கருத்துக்களை பகிர்ந்து கொள்ளவும் தேவைதான கட்டமைப்பை வழங்குகிறது.

மேலும் சமுதாயத்தில் பின்தங்கிய மக்களின் மேம்பாட்டிற்கு வழிவகுக்கும் தகவல் சேவைகளுக்கும், தேர்ந்தெடுத்த தகவல் மற்றும் தகவல் சேவைகளுக்கும், அளிப்பதன் மூலம், மக்கள் பணியாளர்களின் செயல்திறனை மேம்படுத்தி, அவர்கள் சிறப்பாக பணியாற்ற வழிவகை செய்வதற்கும், வேளாண்மை, உடல்நலம், கல்வி, சமூகநலம், எரிசக்தி, மின்னாட்சி ஆகிய ஆறு துறைகளிலிருந்து, தகவல்களை பரிமாற்ற இந்த சமூக மேம்பாட்டு தளம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

மேலும் பலரின் பங்கேற்புடன் தகவல் மற்றும் கருத்து சேகரிப்பு, தகவல் சேவைகளை முடிந்தவரையில் அவரவர் தாய்மொழியிலேயே அறிந்து கொள்வதற்கு ஏதுவாகவும், சமுதாய மேம்பாட்டில் தொடர்புடைய முக்கிய நிறுவனங்களுடன் கூட்டாக செயலாற்றுவதற்காகவும், இதே நோக்கத்துடன் செயல்படும் மற்ற இணையதளங்கள் மற்றும் திட்டங்களுடன் இணைந்து செயல்படுதலுக்காகவும், பல்வேறு அங்கத்தினர் மற்றும் ஊடகங்களை ஒருங்கிணைத்து, பயனுள்ள ஒரு தகவல் பரிமாற்றத்திற்கான சூழலை உருவாக்குவதற்காகவும், தகவல்கள் மற்றும் கருத்துக்கள் - தமிழிலேயே, மல்டிமீடியா பாடங்கள், இணையவழி பாடங்கள், கருத்து பகிர்வு மேடைகள், மதிப்புக்கூட்டு சேவைகள் - வல்லுனரைக் கேளுங்கள், மதர், வியாபார் மற்றும் பல சேவைகள், அலைபேசி சேவைகள் (மொபைல் ஆப்ஸ்)- வல்லுனரைக் கேளுங்கள், மதர், கேவிகே கோஜ், ஷெல்டர், மக்கள் கணினி மையம் - வழிகாட்டி ஆகியவற்றிற்கு இதன் மூலம் தகவல்களை பரிமாறி கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக விகாஸ்பீடியா (தமிழ்) கையேடு, தகவல் பலகை மற்றும் விழிப்புணர்வு ஒட்டுவில்லை (ஸ்டிக்கர்) ஆகியவற்றை வெளியிட்டார்.

இப்பயிற்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி. விஜயராணி, இந்திய வேளாண் ஆராய்ச்சி மையத்தின் (கிரிஷி விஜயன் கேந்திரா) முதன்மை ஆராய்ச்சியாளர் முனைவர் ஆர். பிரேமாவதி, சிபிஆர். சுற்றுசூழல் கல்வி மையத்தின் திட்ட அலுவலர் திரு. எம். மாரியப்பன், சுற்றுசூழல் கல்வி அலுவலர் திரு. கௌதமா, திரு. செந்தில்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.